தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 5 திகதி: 29.11.2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செல்வநாயகி சிவசுப்பிரமணியம்
உதவி ஆசிரியர்: திருமதி உமா ஆதீஸ்வரன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	15	
வினா 3	20	
வினா 4	15	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பாலன் படித்த கதை

பாலன் தன் பாடசாலை நூலகத்திற்குச் சென்றான். அங்கே பல புத்தகங்கள் இருந்தன. அவை ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அங்கே பலர் அமைதியாகப் படித்துக் கொண்டு இருந்தார்கள்.

பாலன் ஒரு கதைப்புத்தகத்தை எடுத்தான். பின்பு அவன் ஓர் இடத்தில் அமர்ந்தான். அவனும் புத்தகம் படிக்க ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் அந்தக் கதைப் புத்தகத்தைப் படித்து முடித்தான். அவனுக்கு கதை மிகவும் பிடித்து இருந்தது. அந்தப் புத்தகத்தை எடுத்த இடத்தில் வைத்தான். பின் வீட்டிற்குச் சென்றான். அன்று இரவு பாலன் அந்தக் கதையைத் தன் தம்பியிடம் சொன்னான்.

(உதவி - நூலகம் - Library)

1. பாலன் எங்கே போனான்?

_____

_____

2. புத்தகங்கள் எவ்வாறு வைக்கப்பட்டு இருந்தன?

_____

_____

3. பாலனுக்கு எது மிகவும் பிடித்திருந்தது?

_____

_____

4. அவன் புத்தகத்தை எங்கே வைத்தான்?

_____

_____

5. பாலன் யாரிடம் அந்தக் கதையைக் கூறினான்?

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	15	பக்கம்	4



மலையில் வந்து முகில்கள் கூட

வண்ண மயிலும் ஆடுது

அழகுத் தோகை விரித்து நின்றே ஆனந்தமாய் ஆடுது



கோல மயிலின் கூத்தைக் கண்டு

குரங்கு தாளம் போடுது

கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து

குரங்கு தாளம் போடுது

1. முகில்கள் எங்கே கூடுகின்றன?

_____

_____

2. முகில்கள் கூட என்ன நடக்கின்றது?

_____

_____

3. மயில் எப்படி ஆடுகிறது?

_____

_____

4. தாளம் போடுவது எது?

_____

_____

5. அது எப்படித் தாளம் போடுகிறது?

_____

_____


வினா இல	3.1	புள்ளிகள்	10	பக்கம்	5

பொருத்தமான சொல்லைக் கொண்டு நிறைவு செய்க.

	நான்		குடிக்கிறேன்
01	நீ		
02	அவன்		
03	அவள்		
04	அது		
05	நாங்கள்		
06	நீங்கள்		
07	அவர்கள்	தண்ணீர்	
08	அவை		
09	மாலா		
10	பாலன்		

வினா இல	3.2	புள்ளிகள்	10	பக்கம்	6

ஓர் எழுத்துச் சொல்லைக் கொண்டு விடை தருக.



01. எது சுடும்? _____

02. எது பறக்கும்? _____

03. எது மணக்கும்? _____

04. எது மாதத்தைக் குறிக்கும்? _____

05. அழைக்கும் சொல் எது? _____

06. எதனால் தொடுவீர்? _____

07. முன்னால் இருப்பவரைக் குறிக்கும் _____

08. போகச் சொல்வது _____

09. தரும்படி கேட்பது _____

10. பொருட்களை இதன் உள்ளே வைக்கலாம் _____

வினா இல	4.1	புள்ளிகள்	10	பக்கம்	7

பின்வரும் ஆண்பால் சொற்களை பெண்பால் சொற்களாக மாற்றி எழுதுக.

1. சிறுவன் பரிசு பெற்றான்.

   _____

2. திருடன் நகைகளைத் திருடினான்.

   _____

3. கிழவன் குளிரில் நடுங்கினான்.

   _____

4. பால்காரன் பாலை விற்றான்.

   _____

5. தலைவன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டான்

   _____

வினா இல	4.2	புள்ளிகள்	5	பக்கம்	7

தரப்பட்ட சொற்களைச் சரியான வடிவத்தில் பயன்படுத்துக.

உதாரணம்:

வினா: நாங்கள் .....கடிதம் எழுதுவோம் (தமிழ்)

விடை: நாங்கள் <u>தமிழில்</u> கடிதம் எழுதுவோம்.

1. கைகேயி கேட்ட ..... தசரதன் கொடுத்தான். (வரங்கள்)
2. இராமாயணம் ..... எழுதப்பட்ட ஒரு காவியம். (வடமொழி)
3. இராமன் வந்து ..... தூக்கினான். (வில்)
4. தசரதன் ..... மன்னன். (அயோத்தி)
5. மகனின் ..... தசரதன் இறந்தான். (பிரிவு)

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	8

கீழே உள்ள அழைப்பிதழை வாசித்து, அழைப்பிதழ் கடிதத்தை நிரப்புக.

முகவரி:
35 ஹோம்புஷ் வீதி
ஸ்ரத்பீல்ட்
நி.ச.வே. 2135

29.11.2025

எனது அன்பான கபிலனுக்கு

வணக்கம். நீ எப்படி இருக்கிறாய்? நான் நலமாக இருக்கிறேன்.

எனது பிறந்த நாளை, எனது பெற்றோர் 20. 12. 2025 சனிக்கிழமை அன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஹோம்புஷ் பூங்காவில் கொண்டாட உள்ளனர். நான் இதற்கு எனது நண்பர்களை அழைக்க விரும்பி உள்ளேன். இதற்கான அழைப்பிதழை உனக்கு அனுப்பி வைக்கிறேன்.

உனது வருகையை எதிர்பார்த்து எனது கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,

உன் அன்பு

பாமதி

பிறந்தநாள் விழா அழைப்பிதழ்

அன்புள்ள .....

வணக்கம்

நான், என் பிறந்தநாள் விழாவுக்கு உன்னை அழைக்க விரும்புகிறேன்.

திகதி: .....

நேரம்: .....

இடம்: .....

கேக் வெட்டல், சுவையான உணவுகள் மற்றும் பல வகையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இப்படிக்கு

உமது தோழி

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	9

பின்வருவனவற்றில் ஏதாயினும் ஒன்றைத் தெரிவு செய்து 80 சொற்களில் கட்டுரை எழுதுக.

1. கீழே உள்ள குறிப்புக்களின் துணையுடன் விளையாட்டுகள் பற்றி எழுதுக.

பெறும் நன்மைகள்

மகிழ்ச்சி

மன அமைதி

விருப்பமான விளையாட்டு



தெரிந்த விளையாட்டுகள்

உடல் உறுதி

பயன்கள்

விளையாட்டுப் போட்டிகள்

அல்லது

2. உமக்குப் பிடித்த தமிழ் வளர்த்த பெரியார் ஒருவரைப் பற்றி எழுதுக.

அல்லது

3. அண்மையில் நடைபெற்ற தமிழரின் ஏதாயினும் ஒரு பண்டிகை பற்றி எழுதுக (தைப்பொங்கல், தீபாவளி)